OPEN ACCESS

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 04.03.2020

Accepted: 15.05.2020

Published: 01.07.2020

Citation:
Raja, A. (2020). Art and Culture of Someswarar temple (Kalai, Panbaattu Thalathil Someswarar Thirukkoyil). Shanlax International Journal of Tamil Research, 5(1), 22–27.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3400

*Corresponding Author:
rajaarchy@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Art and Culture of Someswarar temple (Kalai, Panbaattu Thalathil Someswarar Thirukkoyil)

**Dr. A. Raja**
*Head, Department of Museum*
*Tamil University, Thanjavur, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-8820-2413

**Abstract -** The temples have existed since the Sangam period, although they were built of perishable soil and wood and did not last long. But instead the Pallavas were the first to build cave temples and stone temples. It was later followed by the Pandya and Chola dynasties. This article describes the history, architecture and sculpture of the Someswarar Temple in Anthakudi, in the Keezhvellore taluk, Nagapattinam District, based on the evidence obtained through a field study. Along with these, the information known through the medieval Chola inscriptions here, the ancient Tamil people Architecture technique, structure of the temple and Chola sculptures have been studied historically. Therefore, it would not be an exaggeration to say that the ancient temples are not only places of worship but also treasures of art, history and culture.

**Key Words:** Tamil History, Inscriptions, Temple History, Temple Structure, Tamil Heritage Architecture, Sculpture.

**Foot Notes**

The field study was done by looking directly at the inscription. The inscriptions date to the 10th century AD.

Sitaram Kurumurthy (2007), Nagapattinam District Inscriptions, Tamil Nadu Government Archaeological Department, Chennai, pp.1-2.

Ibid, pp.4-5.

Inscription Magazine 59, Government of Tamil Nadu Archaeological Department, Chennai.

**References**

1. Ganapathy shthapathy.V. (2001). Sirba sennool, thozhinudba kalvi iyakkagam, Chennai.
2. Nagasamy.R. (2009). Thamizh Koyirkalaikal, Stae department of Archaeology, Chennai.
3. Nagappa Nachiyappan. Thamizhnattil pairavar valibaadu, ulaga thamizh aarachi niruvanam, Tharamani, Chennai.
4. Muthusamy pillai.K.M. (1991). Koyir kalanjiyam arimugam, Tamil University, Thanjavur-10.
5. Vaithilingam.S. (2003) Sirbakali, Meyyappan pathibbagam, Chidambaram.
6. Gopinatha Rao.T.A. (1997). Elements of Hindu Iconography Volume II part I, Motilal Banarsidass Publishers, Private limited, Delhi.

# கலை, பண்பாட்டுத் தளத்தில் சோமேசுவரர் திருக்கோயில்

*முனைவர் ஆ. ராஜா*
அருங்காட்சியகத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச்சுருக்கம்:*** *சங்க காலம் முதல் கோயில்கள் இருந்திருக்கின்றன, என்றாலும் அவை அழியுந்தன்மை கொண்ட மண், மரம் ஆகியவற்றால் கட்டப்பட்டமையால் நீண்ட நாட்கள் நிலைத்து நிற்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக பல்லவர்கள் முதன் முதலில் குடைவரைக்கோயில் மற்றும் கற்கோயில்களை அமைத்தனர். இது பின்னர் பாண்டியர் மற்றும் சோழர் மரபினராலும் பின்பற்றப்பட்டது. அந்தவகையில் நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டத்திலுள்ள ஆந்தகுடி என்ற ஊரில் அமைந்துள்ள சோமேசுவரர் திருக்கோயிலுக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டதன் வாயிலாக கிடைத்தச் சான்றுகளின் அடிப்படையில் இத்திருக்கோயிலின் வரலாறு, கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றை ஆராய்ந்து விளக்குகின்றது இக்கட்டுரை. இவற்றோடு இங்குள்ள இடைக்காலச் சே ாழர்காலக் கல்வெட்டுகளின் வாயிலாக அறியப்படும் செய்திகள், பழந்தமிழரின் கட்டடக்கலைத் தொழில் நுட்பம், கோயில் அமைப்பு, கலைநயமிக்க சோழர்காலச் சிற்பங்கள் சிற்பமைவு, அதன் காலம் போன்றவைகளை வரலாற்று ரீதியாக நுணுகி ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. எனவே, தொன்மையானக் கோயில்கள் இறை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி கலை, வரலாறு மற்றும் பண்பாட்டுப் பதிவுகளை வெளிப்படுத்தும் கருவூலமாகவும் விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் வரலாறு, கல்வெட்டுச் செய்திகள், கோயில் வரலாறு, திருக்கோயில் அமைப்பு, தமிழர் மரபு சார்ந்த கட்டடக்கலைத் தொழில் நுட்பம், சிற்பக்கலை.*

சங்க காலம் முதல் கோயில்கள் இருந்திருக்கின்றன, என்றாலும் அவை அழியுந்தன்மை கொண்ட மண், மரம் ஆகியவற்றால் கட்டப்பட்டமையால் நீண்ட நாட்கள் நிலைத்து நிற்கவில்லை. ஆனால் பல்லவர்கள் முதன் முதலில் குடைவரைக்கோயில், ஒற்றைக் கற்கோயில், கட்டடக்கோயில் எனக் கற்கோயில்கள் அமைத்தனர். இது பின்னர் பாண்டியர் மற்றும் சோழர் மரபினராலும் பின்பற்றப்பட்டது. தொன்மையானக் கோயில்கள் இறை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி கலை, வரலாறு மற்றும் பண்பாட்டுப் பதிவுகளை வெளிப்படுத்தும் கருவூலமாகவும் விளங்குகின்றன. அந்தவகையில் நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டத்திலுள்ள ஆந்த குடி என்ற ஊரின் கிழக்குப் பகுதியில் காவிரியாற்றின் கிளை ஆறான பாண்டவ ஆற்றின் கரையில் அமைந்துள்ள சோமேசுவரர் திருக்கோயிலுக்குச் சென்று கள ஆய்வு மேற்கொண்டதன் வாயிலாக கிடைத்தச் சான்றுகளின் அடிப்படையில் வரலாறு, கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றை ஆராய்ந்து விளக்குகின்றது இக்கட்டுரை.

## வரலாற்றில் சோமேசுவரர் திருக்கோயில்

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் எழுத்தமைதி, கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை ஆகியவற்றை நோக்கும்போது கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் காணப்படுகின்றது. இவற்றை இங்குள்ள முதலாம் இராசராசனின் துண்டுக்கல்வெட்டு ஒன்றும்[1,] அவனால்

பிரதிஷ்ட்டை (நிலைநிறுத்துதல்) செய்யப்பட்ட சேத்திரபாலகர் சிற்பமும் அதனை உறுதி செய்கின்றன. இச்சிற்பம் மிகவும் கலை நுட்பத்துடன் அமைந்துள்ளது. மேலும், இக்கோயிலின் கருவறையின் வெளிப்புற ஜகதி மற்றும் குமுதப்படையில் சோழர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை எந்த அரசனால் வெளியிடப்பட்டவை என்பதை அறியமுடியவில்லை. ஆனால் இக்கோயிலில் காணப்படுகிற ஒரு பழமையானத் துண்டுக் கல்வெட்டின் எழுத்தமைவை நோக்கும்போது முதலாம் இராசராசன் காலத்தவையாக இருக்கலாம் எனக் கருதமுடிகிறது.

மேலும், "ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான்" என்று தொடங்கும் இரு கல்வெட்டுகளில் அருமொழி தேவ வளநாட்டு புலியூர் நாட்டிலுள்ள இவ்வூரின் பழைய பெயர் ஆந்தைக்குடியான நிகரிலி சோழ சதுர்வேதி மங்கலம் என்றும் இறைவனின் பெயர் சோமநாதத்தேவர் என்றும் குறிப்பிடுகின்றது[2]. மேலும், இக்கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாக நிலங்கள் அளந்து கொடுத்ததையும் கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. திருவாரூர்க்கோயிலில் உண்ணும் தபசிகளுக்கும், இறைவனுக்கும் இறையிலியாக நிலம் கொடுத்ததையும் இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன[3]. இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலங்களின் எல்லைகள் பற்றியும் இங்குள்ள கல்வெட்டுகள் குறிப்பு தருகின்றன.[4]

### கட்டடக்கலை

சோமேசுவரர் திருக்கோயில் 42 மீட்டர் நீளம், 25 மீட்டர் அகலம் கொண்ட வளாக மதில்சுவர்களுடன் கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம் அமைப்புகளுடன் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இக்கோயிலில் சோமகமலாம்பிகை, சண்டிகேஸ்வரர், விநாயகர், மகாலட்சுமி, சுப்ரமணியர் போன்ற தனிச் சன்னதிகளும் உள்ளன.

### கருவறை

சோமேசுவரர் திருக்கோயில் கருவறையின் வெளிப்புறம் கிழக்கு மேற்காக 620 செ.மீ நீளமும், தெற்கு வடக்காக 620 செ.மீ அகலமும் கொண்டு சதுர வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சோமேசுவரர் திருவுருவம் வட்டமான ஆவுடைநடுவே உருளை வடிவமாக எழுந்துள்ளதை காணமுடிகிறது. கருவறையின் வெளிப்புற கட்டமைப்பு உபானம், ஜகதி, குமுதம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, வாஜனம் ஆகிய அதிட்டான அமைப்புகளுடனும் தாங்குதளம் கருங்கல் கட்டுமானத்திலும் உள்ளது. வெளிப்புறக் கட்டுமானச் சுவர்களில் கட்டமைப்பை நோக்கும்போது கலசம், கண்டம், கிரீவம், குடம் மற்றும் விரிந்த தாமரை இதழ்களைக்கொண்ட பலகை, போதிகை ஆகிய உறுப்புகளோடு உத்திரத்துடன் இணைகிற 29 அரைத்தூண்கள் மூன்று பக்கங்களும் காணப்படுகின்றன. கருவறை வெளிப்புற மேல் பகுதியில் பூதக்கணங்கள், கூடு, கொடுங்கை, யாளவரி ஆகியன மூன்று பக்கங்களிலும் கட்டுமானத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

### தேவகோட்டங்கள்

கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் தேவகோட்டமைப்புகள் (தேவகோஷ்டமைப்பு) அமைக்கப்பட்டுள்ளன. தேவகோட்டமைப்புகளில் இரு புறங்களிலும் கலசம், கண்டம், கிரீவம், குடம் மற்றும் விரிந்த தாமரை இதழ்களைக் கொண்ட பலகை அமைப்புடைய அரைத்தூண்கள் காணப்படுகின்றன. தெற்குப் புறத்தில் உள்ள தேவகோட்டத்தில் தெட்சிணாமூர்த்தி காட்சியளிக்கிறார். மற்ற தேவகோட்டங்களில் சிற்பங்கள் காணப்படவில்லை. பிற்காலத்தில் வேறு இடங்களுக்கு கோஷ்ட சிற்பங்களை எடுத்துச் சென்றிருக்கலாம்.

அர்த்தமண்டபத்தின் தெற்கு மற்றும் வடக்குப் புறங்களிலும் தேவகோட்டமைப்புகள் உள்ளன. இத்தேவகோட்டமைப்புகளில் இரு புறங்களிலும் உள்ள அரைத்தூண்கள் மேற்குறிப்பிட்ட தூண்களின் அமைப்பை போன்று ஒத்த நிலையில் அமைந்துள்ளன. இத்திருக்கோயில் கட்டமைப்பானது முழுவதும் இடைக்காலச் சோழர்களின் கலைப் பாணியில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**விமானம்**

சோமேசுவரர் திருக்கோயில் விமானத்தின் அதிட்டானமைப்பு 620 செ.மீ நீளமும், 620 செ.மீ அகலமும் கொண்டதாக அமைந்துள்ளது. இக்கோயில் விமானம் ஒரு தள அமைப்பில் வேசரப்பாணியில் அமைந்துள்ளது. விமானத்தின் நான்கு பக்கங்களிலும் வேலைப்பாடுகளுடன் கூடிய சுதைச் சிற்பங்கள் நிறைந்து அழகுடன் காட்சியளிக்கின்றன. ஆனால் தற்பொழுது இக்கோயில் விமானத்தின் கூரைப் பகுதிகளில் மரம், செடிகள் முளைத்து வளர்ந்து காணப்படுகின்றனது. இதனால் விமானத்தின் கட்டுமான அமைப்பு சிதிலமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றைப் புனரமைத்தால் தான் நமது பண்பாட்டு மரபுச்சின்னங்கள் பாதுகாக்கப்படும்.

**அர்த்தமண்டபம்**

சோமேசுவரர் திருக்கோயிலில் கருவறைக்கு அடுத்த நிலையில் உள்ள அர்த்தமண்டபம் கிழக்கு மேற்காக 217செ.மீ நீளம் கொண்டு சதுர வடிவத்தில் காணப்படுகிறது. அர்த்தமண்டபத்தின் வெளிப்புறச்சுவர் கட்டுமான அமைப்பு கருவறையின் அதிட்டானத்தை ஒத்த நிலையில் அமைந்துள்ளது. அதாவது அதிட்டானம், சுவர், பிரஸ்தரம் எனும் கூரை ஆகிய மூன்று அங்கங்களைக் கொண்டு விளங்குகின்றன. மேலும், புறச்சுவர்களில் தெற்கிலும் வடக்கிலும் கலசம், கண்டம், கிரீவம், குடம் மற்றும் விரிந்த தாமரை இதழ்களைக்கொண்ட பலகை அமைப்புடைய அரைத்தூண்கள் தெற்கு மற்றும் வடக்குப் புறங்களில் காணப்படுகின்றன. இம்மண்டபத்தின் இரு புறங்களிலும் (தெற்கு, வடக்கு) தேவகோட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

**மகாமண்டபம்**

மகாமண்டபம் அர்த்தமண்டபத்திற்கு முன் சதுரமான வடிவமைப்பில் அமைந்துள்ளது. இம்மண்டபம் கிழக்கு மேற்காக 1060 செ.மீ நீளமும், தெற்கு வடக்காக 820 செ.மீ அகலமும் கொண்டதாகக் காணப்படுகிறது. இம்மண்டத்திற்கு இரண்டு நுழைவு வாயில்கள் உள்ளன. மண்டபத்தின் முன் பக்கமுள்ள நுழைவு வாயில் 175 செ.மீ அகலமும், மண்டபத்தின் தெற்குப் புறத்தில் உள்ள மற்றொரு நுழைவு வாயில் 170 செ.மீ அகலமும் கொண்டதாக அமைந்துள்ளது. இம்மண்டப உட்புறத்தில் வெட்டுப்போதிகை அமைப்புகளுடைய ஆறு கருங்கல் தூண்கள் காணப்படுகின்றன.

**சிற்பக்கலை**

இத்திருக்கோயில் கருவறையில் மூலவராக லிங்க வடிவில் சோமேசுவரர் உள்ளார். இக்கோயில் மகாமண்டபத்தில் நந்தி ஒன்று கருவறையை நோக்கியவாறு அமைந்துள்ளது. மேலும், தனிசன்னதியில் சோமகமலாம்பிகை அம்மன் சிற்பமும், விநாயகர், சுப்ரமணியர், கஜலட்சுமி, சதுர்முக சண்டிகேஸ்வரர், போன்ற சிற்பங்கள் தனிச்சன்னதிகளிலும் அமைந்துள்ளன. இச்சிற்பங்கள் அனைத்தும் இடைக்காலச் சோழர்களின்கலைப்பாணியில்காணப்படுகின்றன.

**தேவகோட்டச் சிற்பங்கள்**

**தட்சிணாமூர்த்தி**

கருவறை தெற்குப் புற தேவகோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தட்சிணாமூர்த்தி வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலை வலது முழங்கால் மீது வைத்தவாறு, நான்கு கரங்களுடன் வீராசனத்தில் காட்சியளிக்கிறார். மேல் வலக்கரத்தில் நாகமும், இடக்கரத்தில் தீச்சுடரும்

காணப்படுகிறது. கீழ் வலக்கரம் வியக்யாஞும், இடக்கரம் இடது தொடைமீது அமைந்து புத்தக முத்திரையில் ஓலைச்சுவடியை ஏந்தியுள்ளார். தட்சிணாமூர்த்தியின் தலையை சடாபாரம் அலங்கரிக்கிறது. காதுகளில் முறையே மகர குண்டலமும், சுருள் ஓலையும் அணி செய்ய கழுத்தில் சவடி, சரப்பளி, நீண்ட முத்தாரம் போன்றவை அலங்கரிக்க, மார்பில் முப்புரி நூலும் காணப்படுகின்றன. முகத்திலுள்ள கண்கள் தட்சிணாமூர்த்தியின் தியான நிலையைக் காட்டுகின்றன. தட்சிணாமூர்தியின் வலது, இடது பக்கங்களில் முனிவர்களும், தட்சிணாமூர்த்தி சிற்பத்தின் பின் புறம் ஆலமரமும் சுவரில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பம் இடைக்காலச்சோழர் காலத்தைச் சார்ந்தது.

### துர்க்கை

வடக்குப் புற தேவகோட்டத்தில் அமைந்திருந்த அதிதேவதை என்று குலோத்துங்கச் சோழ மன்னனால் பாராட்டப்பட்டதாகக் கூறப்படும், துர்க்கை அம்மன் தற்பொழுது மகாமண்டபத்தினுள் வடக்குப் புறத்தில் தெற்கு நோக்கியவாறு நின்ற நிலையில் காட்சி அளிக்கிறது. இதே நின்ற நிலையில் மண்டபத்தின் உள்புறத்தில் அமைந்திருப்பது தமிழகத்தின் பிற கோயில்களில் காணப்படாத ஒன்றாகும். இச்சிற்பம் பிற்காலத்தில் தேவகோட்டத்திலிருந்து எடுத்து மகாமண்டபத்தில் வைக்கப்பட்டவையாக இருக்கலாம்.

### சதுர்முக சண்டிகேஸ்வரர்

சோமேசுவரர் கோயில் கருவறைக்கு வடக்குப் பக்கத்தில் தனி சன்னதியில் அமைந்துள்ள சதுர்முக சண்டிகேசுவரர் பீடத்தில் சுகாசன நிலையில் வலது காலை தொங்கவிட்டும், இடது காலை மடக்கி பீடத்தில் வைத்தவாறும் அமர்ந்துள்ளார். நான்கு பக்கங்களிலும் தலை அமைப்பைக் கொண்ட சதுர்முக சண்டிகேசுவரர் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளார். நான்கு கரங்களுடைய சண்டிகேஸ்வரரின் வலமேற்கரத்தில் அக்கமாலையும், இடக்கரத்தில் அங்குசமும், இடக்கரத்தில் சுவடியும் காணப்படுகிறது. வலது கீழ்க்கரத்தில் அபய முத்திரை உள்ளது. இது போன்ற அமைப்புகளை உடைய சண்டிகேசுவரர் சிற்பம் (நான்கு தலைகளையுடையது) தமிழகத்திலுள்ள பிற கோயில்களில் காண்பது அரிது. இச்சிற்பம் கலைநயத்துடன் வடிமைக்கப்பட்டுள்ளமை இடைக்காலச் சோழர்களின் கலைத்திறனுக்குச் சிறந்த சான்றாகும்.

### பைரவர்

கிழக்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள பைரவர் சிற்பம் சமபாத ஸ்தானத்தில் நின்ற நிலையில் பத்ம பீடத்தில் நாய் வாகனத்துடன் காட்சியளிக்கிறது. பைரவமூர்த்தி உக்ரமான முகமும், மூன்று கண்களும், நான்கு கைகளும், செந்நிற திருமேனியும் உடையவராய் திகம்பரராய், ஜடா மகுடத்துடன் தலைமுடியில் மகர பூரிமத்தைக் கொண்ட தீச்சுடரினை தலைக்கோலமாய்க் கொண்டுள்ளார். தலையில் பிறை சந்திரன், வலது, இடது மேற்கரங்களில் உடுக்கை, பாசம் போன்றவையும், வலது, இடது கீழ்க்கரங்களில் முறையே சூலம், கபாலம் போன்றவையும் கொண்டுள்ளார். வலது, இடது தன்கரத்தில் பூரிமம் கட்டினையும் கைவளையல்களையும் அணிந்துள்ளார். கழுத்திலே மணிமாலை, காதுகளில் முறையே மகர குண்டலம், பத்தகுண்டலம், மார்பிலே முப்புரி நூல் ஆகியவற்றைக் அவர் கொண்டுள்ளார். இச்சிற்பமே கலை நயத்துடன் வடிவமைப்பட்டு முதலாம் இராசராசச்சோழனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது.

### நிறைவுரை

சோமேசுவரர் திருக்கோயில் கல்வெட்டுகள், கட்டுமான அமைப்பு மற்றும் சிற்பமைவுகளை நோக்கும்பொழுது இடைக்காலச் சோழர் காலத்தைச் சார்ந்தவையாகக் கருதமுடிகிறது. இங்கு காணப்படுகிற பழமையானத் துண்டுக் கல்வெட்டுகளின் அடிப்படையிலும் சிற்பங்களின் கலை நுட்பத்தின் அடிப்படையிலும்

கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் கருதலாம். மேலும், இத்திருக்கோயில் சன்னதிகளில் அமைந்துள்ள சிற்பங்கள் யாவும் இடைக்காலச் சோழர்களின் கலைப்பாணியில் அமைந்துள்ளது சிறப்புக்குரியதாகும். இடைக்காலச் சோழர்கள் திருக்கோயில்கள் நிறுவுதலிலும் கலைத்திறன் மிக்க சிற்பங்களை நிலை நிறுத்துவதிலும் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். இதன்மூலம் இடைக்காலச் சோழர்கள் திருக்கோயில்களை மையமாக வைத்து கலை, பண்பாடு, கலாச்சாரம், சமூகம் ஆகியவற்றைக் கட்டமைத்து பாதுகாத்து வளர்த்துள்ளனர் என்பது புலனாகிறது.

## சான்றெண் விளக்கம்

1. கள ஆய்வில் நேரடியாகக் கல்வெட்டைப் பார்த்துப் படிக்கப்பட்டது. கல்வெட்டின் எழுத்தமைவை நோக்கும்போது கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் கருதமுடிகிறது.
2. சீதாராம் குருமூர்த்தி, நாகப்பட்டின மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2007, பக்.1-2.
3. மேலது, பக்.4-5.
4. கல்வெட்டு இதழ் 59, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

## பார்வை நூல்கள்


1. கணபதி ஸ்தபதி.வை, சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி இயக்கம், தமிழ்நாடு, சென்னை, 2001.
2. நாகசாமி.இரா, தமிழகக் கோயிற் கலைகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2009.
3. நாகப்ப நாச்சியப்பன், தமிழ் நாட்டில் பைரவர் வழிபாடு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி சென்னை.
4. முத்துச்சாமி பிள்ளை. கோ.மு, கோயிற் களஞ்சியம் அறிமுகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
5. வைத்திலிங்கம்.செ, சிற்பக்கலை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003.
6. கோபிநாத் ராவ். டி. ஏ. (1997). இந்து ஐகானோகிராஃபி தொகுதி II பகுதி I, மோட்டிலால் பனர்சிதாஸ் பப்ளிஷர்ஸ், பிரைவேட் லிமிடெட், டெல்லி.